**மாவட்ட அமர்வு நீதிமன்றம், நாகப்பட்டினம்**

முன்னிலை: திருமதி. ஜி.எம். வசந்தி, எம்.எல்.,

முழுக் கூடுதல் பொறுப்பு மாவட்ட அமர்வு நீதிபதி, நாகப்பட்டினம்

(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)

**2026ம் ஆண்டு ஜூன் மாதம் 04ம் நாள்** - வியாழக்**கிழமை**

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் வைகாசி 21-ம் நாள்

**கு.ப.ம.எண் 425/2026**

1. இந்திரஜித், த/பெ சேகர்
2. கேசவன், த/பெ சேகர்
3. பாரதி, த/பெ சுப்பிரமணியன்
4. பாலமுருகன், த/பெ காளியப்பன் ..... மனுதாரர்கள்/ எதிரிகள்

-எதிர்-

காவல் ஆய்வாளர், திட்டச்சேரி காவல்நிலையம்,
குற்ற எண் 47/20226 ......எதிர்மனுதாரர்

இம்மனு என் முன்பாக இன்று (04.06.2026) விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்தரப்பு வழக்குரைஞர் திரு. த. சோமசுந்தரம் மற்றும் எதிர்மனுதாரர்தரப்பு அரசு வழக்குரைஞர் திரு. ஆர்.செல்வராஜ் ஆகியோர் ஆஜராகி எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.....

**//உத்தரவு//**

இம்மனு எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள குற்ற எண் 47/2026-ன் கீழ், பிரிவுகள் 126, 296(b), 115(2), 118(1), 132, 351(3) உ/இ பிரிவு 3(5) BNS மற்றும் 3(1) TNPPDL Act கீழான குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டுள்ள மனுதாரர்கள்/குற்றம் சாட்டப்பட்டவர்களால் பிணை கோரி பிரிவு 483 BNSS ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்கள்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர்கள் நிரபராதிகள் என்றும், மனுதாரர்கள் மீது பொய்யான வழக்கு புனையப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்றும், மனுதாரர்கள் கடந்த 26.04.2026 அன்று கைது செய்யப்பட்டு 40 நாட்களாக நீதிமன்றக்காவலில் உள்ளார்கள் என்றும், இம்மனு மூன்றாவது பிணை மனு என்றும், எனவே மனுதாரர்களுக்கு ஜாமீன் வழங்கி உத்தரவிடவேண்டும் என்று கோரினார்.

3. அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் எதிரிகள் 25.04.2026 அன்று கச்சா எண்ணெய் ஏற்றி கொண்டு ONGC நிறுவனத்திற்கு வந்த டேங்கர் லாரியை வழி மறித்து, லாரி ஓட்டுனரை அடித்தும், திட்டியும் லாரியின் முன் கண்ணாடி, சைடு கண்ணாடி, பின் பக்க இண்டிகேட்டர் ஆகியவற்றை உடைத்து ரூ. 30,000/- க்கு சேதத்தை ஏற்படுத்தியும் , பின்னர் சம்பவம் குறித்து விசாரணை செய்ய வந்த அரசு ஊழியரான காவலர் அரவிந்த் என்பவரை தாக்கியும், அவரது செல்போனை உடைத்தும் சேதங்களை

ஏற்படுத்தியுள்ளார்கள் என்றும், இவ்வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளதாகவும், மனுதாரர்களை பிணையில் விட்டால் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படக்கூடும் என்றும் வாதிட்டு மனுதாரர்களுக்கு ஜாமீன் வழங்க கடும் ஆட்சேபனை தெரிவித்தார்.

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள் மீது பிரிவுகள் 126, 296(b), 115(2), 118(1), 132, 351(3) உ/இ பிரிவு 3(5) BNS மற்றும் 3(1) TNPPDL Actன் கீழ் குற்றம் சாட்டப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் 25.04.2026 அன்று குற்றம் நடைபெற்றுள்ளது. மனுதாரர்கள் மறுநாள் 26.04.2026 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, மனுதாரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மனுதாரர்கள்/ எதிரிகள் 25.04.2026 அன்று கச்சா எண்ணெய் ஏற்றிக்கொண்டு ONGC நிறுவனத்திற்கு வந்த டேங்கர் லாரியை வழி மறித்து, லாரி ஓட்டுனரை அடித்தும், திட்டியும் லாரியின் முன் கண்ணாடி, சைடு கண்ணாடி, பின் பக்க இண்டிகேட்டர் ஆகியவற்றை உடைத்து ரூ. 30,000/- க்கு சேதத்தை ஏற்படுத்தியும் , பின்னர் சம்பவம் குறித்து விசாரணை செய்ய வந்த அரசு ஊழியரான காவலர் அரவிந்த் என்பவரை தாக்கியும், அவரது செல்போனை உடைத்தும் சேதங்களை ஏற்படுத்தியுள்ளனர். மனுதாரர்கள் பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்தி, கடமையில் இருந்த காவலரைத் தாக்கி, அவரது பணியைச் செய்யவிடாமல் தடுத்துள்ளனர். மனுதாரர்களுக்கு ஜாமீன் வழங்கினால், அவர்கள் சாட்சிகளை மிரட்டவோ அல்லது திசைத்திருப்பவோ வாய்ப்புள்ளது. வழக்கின் புலன் விசாரணை இன்னும் முடிவடையாமல் நிலுவையில் உள்ளது. எனவே மேலே சொன்ன காரணங்கள் மற்றும் வழக்கின் தீவிரத்தன்மையை (Gravity of the offense) கருத்தில்கொண்டு, இந்த மனுவை நீதிமன்றம் **தள்ளுபடி** செய்து உத்தரவிடுகிறது.

முடிவில் இம்மனு **தள்ளுபடி** செய்யப்படுகிறது.

இன்று (04.06.2026) திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/- ஜி.எம். வசந்தி,
மாவட்ட அமர்வு நீதிபதி (முகூபொ)
(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)
நாகப்பட்டினம்.

நகல்

1. நீதித்துறைநடுவர் எண் 2, நாகப்பட்டினம்
2. காவல் ஆய்வாளர், திட்டச்சேரி காவல்நிலையம்
3. திரு. த. சோமசுந்தரம், வழக்கறிஞர், நாகப்பட்டினம்